பெரியாழ்வார் அருளிச் செய்த
பெரியாழ்வார் திருமொழி
நான்காம் பத்து

பத்தாம் திருமொழி - துப்புடையாரை
அந்திம காலத்தில் கடாக்ஷிக்கும்படி அப்போதைக்கு இப்போதே
பெரிய பெருமாள் திருவடிகளில் சரணம் புகுதல்

** துப்புடையாரை அடைவதெல்லாம் *
சோர்விடத்துத் துணை ஆவர் என்றே *
ஒப்பிலேன் ஆகிலும் நின்னடைந்தேன் *
ஆனைக்கு நீ அருள் செய்தமையால் **
எய்ப்பென்னை வந்து நலியும் போது *
அங்கேதும் நான் உன்னை நினைக்க மாட்டேன் *
அப்போதைக்கிப்போதே சொல்லி வைத்தேன் *
அரங்கத்தரவணைப் பள்ளியானே! 1

சாமிடத்து என்னைக் குறிக்கொள் கண்டாய் *
சங்கொடு சக்கரம் ஏந்தினானே! *
நாமடித்து என்னை அனேக தண்டம் *
செய்வதா நிற்பர் நமன் தமர்கள் **
போமிடத்து உன் திறத்து எத்தனையும் *
புகா வண்ணம் நிற்பதோர் மாயை வல்லை *
ஆமிடத்தே உன்னைச் சொல்லி வைத்தேன் *
அரங்கத்தரவணைப் பள்ளியானே! 2

எல்லையில் வாசல் குறுகச் சென்றால் *
எற்றி நமன் தமர் பற்றும் போது *
நில்லுமின் என்னும் உபாயம் இல்லை *
நேமியும் சங்கமும் ஏந்தினானே! **
சொல்லலாம் போதே உன் நாமம் எல்லாம் *
சொல்லினேன் என்னைக் குறிக்கொண்டு என்றும் *
அல்லல் படா வண்ணம் காக்க வேண்டும் *
அரங்கத்தரவணைப் பள்ளியானே! 3

ஒற்றை விடையனும் நான்முகனும் *
உன்னை அறியாப் பெருமையோனே! *
முற்ற உலகெல்லாம் நீயே ஆகி *
மூன்றெழுத்தாய முதல்வனேயோ! **
அற்றது வாணாள் இவற்கு என்றெண்ணி *
அஞ்ச நமன் தமர் பற்றல் உற்ற *
அற்றைக்கு நீ என்னைக் காக்க வேண்டும் *
அரங்கத்தரவணைப் பள்ளியானே! 4

பையரவினணைப் பாற்கடலுள் *
பள்ளி கொள்கின்ற பரம மூர்த்தி! *
உய்ய உலகு படைக்க வேண்டி *
உந்தியில் தோற்றினாய் நான்முகனை **
வைய மனிசரைப் பொய் என்றெண்ணிக் *
காலனையும் உடனே படைத்தாய் *
ஐய! இனி என்னைக் காக்க வேண்டும் *
அரங்கத்தரவணைப் பள்ளியானே! 5

தண்ணனவில்லை நமன் தமர்கள் *
சாலக் கொடுமைகள் செய்யா நிற்பர் *
மண்ணொடு நீரும் எரியும் காலும் *
மற்றும் ஆகாசமும் ஆகி நின்றாய்! **
எண்ணலாம் போதே உன் நாமம் எல்லாம் *
எண்ணினேன் என்னைக் குறிக்கொண்டு என்றும் *
அண்ணலே! நீ என்னைக் காக்க வேண்டும் *
அரங்கத்தரவணைப் பள்ளியானே! 6

செஞ்சொல் மறைப் பொருள் ஆகி நின்ற *
தேவர்கள் நாயகனே! எம்மானே! *
எஞ்சலில் என்னுடை இன்னமுதே! *
ஏழுலகும் உடையாய்! என்னப்பா! **
வஞ்ச உருவின் நமன் தமர்கள் *
வலிந்து நலிந்து என்னைப் பற்றும் போது *
அஞ்சலம் என்று என்னைக் காக்க வேண்டும் *
அரங்கத்தரவணைப் பள்ளியானே! 7

நான் ஏதும் உன் மாயம் ஒன்றறியேன் *
நமன் தமர் பற்றி நலிந்திட்டு * இந்த
ஊனே புகே என்று மோதும் போது *
அங்குன்னை நானொன்று நினைக்க மாட்டேன் **
வானேய் வானவர் தங்கள் ஈசா! *
மதுரைப் பிறந்த மாமாயனே! * என்
ஆனாய்! நீ என்னைக் காக்க வேண்டும் *
அரங்கத்தரவணைப் பள்ளியானே! 8

குன்றெடுத்து ஆநிரை காத்த ஆயா! *
கோநிரை மேய்த்தவனே! எம்மானே! *
அன்று முதல் இன்று அறுதியா *
ஆதியஞ்சோதி மறந்தறியேன் **
நன்றும் கொடிய நமன் தமர்கள் *
நலிந்து வலிந்து என்னைப் பற்றும் போது *
அன்றங்கு நீ என்னைக் காக்க வேண்டும் *
அரங்கத்தரவணைப் பள்ளியானே! 9

** மாயவனை மதுசூதனனை *
மாதவனை மறையோர்கள் ஏத்தும் *
ஆயர்கள் ஏற்றினை அச்சுதனை *
அரங்கத்தரவணைப் பள்ளியானை **
வேயர் புகழ் வில்லிபுத்தூர் மன் *
விட்டுசித்தன் சொன்ன மாலை பத்தும் *
தூய மனத்தனராகி வல்லார் *
தூமணிவண்ணனுக்கு ஆளர் தாமே 10

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்